**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032

தொலைபேசி 044-22201337

மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in

இணையதளமுகவரி: www/tnlbo.tn.gov.in

**முன்னிலை: மகேசன் காசிராஜன் இ.ஆ.ப (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.127/மா/2024**

**நாள்: 14.10.2024**

திரு.G.நீதி @ கருணாநிதி, — மனுதாரர்
சென்னை–600 081.

மண்டல அலுவலர், — எதிர் மனுதாரர்.
மண்டலம் 5,
பெருநகர சென்னை மாநகராட்சி,
சென்னை.

சென்னை, தண்டையார்பேட்டை, தமிழன் நகர், ஐ.ஓ.சி, மெயின் தெரு கதவு எண்.147 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.G.நீதி @ கருணாநிதி என்பவரின் 24.10.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 02.11.2023 அன்று பெறப்பட்டு, 127/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரர் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை, தண்டையார்பேட்டை, தமிழன் நகர், ஐ.ஓ.சி, கதவு எண்.147 மெயின் தெருவில் வசிக்கும் திரு.G.நீதி @ கருணாநிதி என்பவர் தனது 24.10.2023 நாளிட்ட மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“சென்னை–600 104, மண்டலம் 5, வார்டு 59, பூக்கடை, பாரிஸ் பேருந்து நிறுத்தம் எதிரில், NSC போஸ் சாலை, கதவு எண்.206, (ஒட்டல் சரவண பவன் மற்றும் அடையார் ஆனந்த பவன் கட்டிடத்தின் நடுவில் உள்ள அனுமதியற்ற கட்டிடம்) என்ற இடத்தில் சென்னை மாநகராட்சியிடம் எந்தவித கட்டிட அனுமதியில்லாமல் தரைத்தளத்துடன் (G+2) இரண்டு மாடி வணிக கட்டிடம் கட்டியது தொடர்பாக பல முறை புகார் அளித்தும் இது நாள் வரை சென்னை மாநகராட்சி, மண்டலம் 5–ன் அதிகாரிகள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், கடந்த இரண்டு வருடத்திற்கு முன்பு கொடுக்கப்பட்ட புகாருக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது என்றும் நடவடிக்கை

எடுக்கப்படும் என பதில் அளித்தார்கள். தற்போதும் இரண்டு வருடம் கடந்த பின்பும் அதே பதிலைத்தான் கூறியுள்ளார்கள். ஆனால் எந்தவித நடவடிக்கைகள் ஏதும் எடுக்கவில்லை.

2) இக்கட்டிடத்தின் உரிமையாளர், நான் அறிந்த வகையில் உள்ளூர் செல்வாக்கு மிக்கவர் என்றும் சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் இலஞ்சம் பெற்றுக்கொண்டு மேற்கண்ட அனுமதியற்ற கட்டிடம் கட்டி விதிமீறல் செய்துள்ளனர் என்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 5–ன்அதிகாரிகள் சட்டப்படி தகுந்த நடவடிக்கை எடுக்காமல் காலம் தாழ்த்தி வருகிறார்கள் என தெரிய வருகிறது என்றும் இத்துடன் மாநகராட்சி அதிகாரிக்கு அனுப்பிய இணையதள புகார் மனுவின் நகல்களை இணைத்து அனுப்பியுள்ளேன் என்று தெரிவித்து உயர்திரு. அய்யா அவர்கள் எனது புகார் மனுவை கோப்பில் எடுத்து விசாரணை செய்து மேற்கண்ட அனுமதியற்ற விதிமீறல் செய்த கட்டிடம் மீதும் தற்போது வரை நடவடிக்கை எடுக்காத மாநகராட்சி, மண்டலம் 5ன் அதிகாரிகள் மீதும் சட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென தங்களை மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.''

3) மேற்கண்ட மனு மீதான அறிக்கை அனுப்புமாறு இம்முறைமன்ற 02.01.2024 நாளிட்ட கடிதத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 5–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

4) பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் மண்டல அலுவலர் தன்னுடைய 23.09.2024 நாளிட்ட கடிதத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

“பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 5, வார்டு 59க்கு உட்பட்ட என்.எஸ்.சி.போஸ் சாலை, கதவு எண்.206இல் உள்ள கட்டிடம் வார்டு பொறியாளரால் ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வின் போது மேற்கண்ட கட்டிடத்தில் பராமரிப்பு பணிகள் நடைபெற்று வந்தது. இப்பணி குறித்து நிறுத்த தாக்கீது 06.07.2021 அன்று வழங்கப்பட்டு பணி நிறுத்தப்பட்டது. இத்தகவல் மனுதாரருக்கும் தெரிவிக்கப்பட்டது.

5) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 24.09.2024 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 02.09.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

6) 24.09.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் மனுதாரர் திரு.G.நீதி @ கருணாநிதி, அவர்கள் ஆஜராகவில்லை.

7) 24.09.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் செயற்பொறியாளர் நேரடியாக ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

“மனுதாரர் புகார் தெரிவித்துள்ள சென்னை மாநகராட்சி, வார்டு 59, பூக்கடை, பாரீஸ் பேருந்து நிறுத்தம் எதிரில் N S C போஸ் சாலை கதவு எண்.206–ல் அமைந்துள்ள கட்டடம் ஆய்வு செய்யப்பட்டது. கட்டட உரிமையாளரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் அக்கட்டிடத்தில் பராமரிப்பு பணிகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் புதிதாக கட்டுமான பணிகள் ஏதும் நடைபெறவில்லை என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்”.

8) மனுதாரரின் மனு, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் செயற்பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் தெரிய வருகின்றன.

மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5, வார்டு 59, பூக்கடை N S C போஸ் சாலை, கதவு எண். 206இல் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதியில்லாமல் இரண்டு மாடி வணிக கட்டிடம் கட்டியிருப்பதாகவும், இது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5ற்கு பலமுறை புகார் மனு அளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று தெரிவித்து மேற்கண்ட அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிட உரிமையாளர் மீதும், தனது புகார் மனு மீது நடவடிக்கை எடுக்காத பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் அலுவலர்கள் மீது சட்டபூர்வமான உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

9) மனுதாரர் குறிப்பிட்டுள்ள கட்டிடம் பெருநகர சென்னை மாநகராட்சி வார்டு பொறியாளரால் ஆய்வு செய்யப்பட்டு மேற்கண்ட கட்டிடத்தில் பராமரிப்பு பணிகள் நடைபெற்று வருவதாகவும், இப்பணியினை நிறுத்த 06.07.2021 அன்று தாக்கீது வழங்கப்பட்டு பணி நிறுத்தப்பட்டது என்றும், மேலும் தற்போது புதிதாக கட்டுமான பணிகள் ஏதும் நடைபெறவில்லை என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் மண்டல அலுவலர் தன்னுடைய 23.09.2024 நாளிட்ட அறிக்கையிலும், செயற்பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்திலும் தெரிவித்துள்ளனர்.

10) மனுதாரருக்கு 24.09.2024 அன்று விசாரணைக்கு ஆஜராகும்படி பதிவு தபாலில் அழைப்பாணை அனுப்பப்பட்டு அதனை மனுதாரர் 10.09.2024 அன்று பெற்றுள்ளார். விசாரணை நாள் 24.09.2024 அன்று தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது தன்னால் விசாரணைக்கு வர இயலாது என்று தெரிவித்தார்.

11) பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலரும், செயற்பொறியாளரும் மனுதாரர் குறிப்பிட்ட அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடம் குறித்து அக்கட்டிடத்தில் பராமரிப்பு பணி மட்டும் நடைபெறுவதாகவும் புதியதாக கட்டுமான பணிகள் ஏதும் நடைபெறவில்லை எனவும், குறிப்பிட்ட கட்டிடத்தில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, உரிமையாளருக்கு திட்ட வரைப்பட நகல் கோரி தாக்கீது வழங்கப்பட்டது என்றும், கட்டிட உரிமையாளர் தரப்பில் கட்டிடம் 40 வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட கட்டிடம் எனவும், தான் இக்கட்டிடத்தின் மூன்றாவது உரிமையாளர் என தெரிவித்தார் எனவும் முந்தைய உரிமையாளர் திட்ட அனுமதி சம்பந்தமாக எந்த விவரங்களையும், தற்போதைய உரிமையாளரிடம் வழங்கவில்லை என தெரிவித்துள்ள நிலையில், மேற்கண்ட கட்டிடம் Tamil Nadu Town and Country Planning Act 1971ல் குறிப்பிட்டுள்ள வரையறைக்குள் கட்டப்பட்டுள்ளதா என்பது குறித்து கள ஆய்வு செய்து, உரிய தொடர் நடவடிக்கை மேற்கொண்டு, அது குறித்த அறிக்கையினை 45 தினங்களுக்குள் இம் முறைமன்றத்திற்கு அனுப்பி வைக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5ன் மண்டல அலுவலருக்கு இம்முறைமன்றம் அறிவுரை வழங்கி ஆணையிடுகிறது.

2024 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள்14–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு.G.நீதி @ கருணாநிதி,
எண்.147, மெயின் தெரு, தமிழன் நகர்,
ஐ.ஓ.சி, தண்டையார் பேட்டை,
சென்னை–600 081.

2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை.

3) மண்டல அலுவலர்,
மண்டலம் 5, பெருநகர சென்னை மாநகராட்சி,
62, பேசின்பிரிட்ஜ் சாலை,
பழைய வண்ணாரப்பேட்டை,
சென்னை–600 021.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

5) ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75, சாந்தோம் நெடுஞ்சாலை
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

18/10/24

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).

17/24

5/9